**MCOP.150/2022 and 152/2022**

**நாள். 15.07.2025**

**ம.சா. 2 – வேல்முருகன்**

**<u>3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் ஓட்டிச் சென்ற TN 65 U 3182 என்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் சரவணன் என்பவருக்கு சொந்தமானது. விபத்து சமயத்தில் அந்த இருசக்கர வாகனத்தை நான் தான் ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல இருந்தது. எந்த வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நான் உரிமம் பெற்றிருந்தேன் என்றால் இராமநாதபுரம். நான் தற்போதும் இருசக்கர வாகனம் ஓட்டி வருகிறேன் என்றால் இல்லை, காலில் அடிபட்டதால் ஓட்ட இயலவில்லை. என்னுடைய ஓட்டுநர் உரிமம் எண் தெரியுமா என்றால் தெரியாது. ஓட்டுநர் உரிமம் மனுவில் நான் காட்டியுள்ள விலாசத்தை கொண்டுதான் பெற்றுள்ளேன். நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்பீடு கிடையாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். விபத்திற்கு பின்பு மோட்டார் வாகன ஆய்வாளர் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்தபோது ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்று கேட்டாரா என்றால் ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டதாக சொன்னேன். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும், தொலைந்துவிட்டதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த தேவிப்பட்டினம் – இராமநாதபுரம் சாலை இரண்டு கனரக வாகனம் செல்லக்கூடிய சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையில் நான் எங்கிருந்து எங்கு வந்தேன் என்றால் ஆர்எஸ் மங்களத்திலிருந்து இராமநாதபுரம் நோக்கி ரோட்டின் இடதுபுறமாக வந்தேன். என் மீது மோதிய இருசக்கர வாகனம் எங்கிருந்து வந்தது என்றால் தேவிப்பட்டினத்திலிருந்து எங்கள் வாகனத்திற்கு பின்னால் வந்தது. விபத்து சாலையில் இடதுஓரத்தில் நடந்தது என்றால் சரிதான். நான் எவ்வித முன்னெச்சரிக்கை சமிக்கை இன்றி இருசக்கர வாகனத்தை திடீரென நிறுத்தியதால்தான் பின்னால் வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் எந்த பகுதிகளில் சேதாரங்கள் ஏற்பட்டது என்றால் பின்பகுதியில் உள்ள சக்கரம் மற்றும் புகைபோக்கியில்

ஏற்பட்டது. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் சேதாரம் ஏற்பட்டிருப்பதாக மோட்டார் வாகன ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார் என்றால் தூக்கி வீசியதில் அடிபட்டிருக்கும். நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பின்னால், பின்னால் வந்த வாகனம் மோதியிருந்தால் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு இல்லை என்பதால்தான் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான்தான் விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் கவனக்குறைவாக ஓட்டிச் சென்று விபத்திற்கு காரணமாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்த சக்தீஸ்வரன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, நானும், அவரும் அணிந்திருந்தோம். விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். புகாரிலோ, மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ தலைக்கவசம் அணிந்து சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சக்தீஸ்வரனுக்கு உடம்பின் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்றால் தலை, உடல் மற்றும் காது பகுதிகளில் ஏற்பட்டது. எனக்கு வலதுகால் குதியில் கட்டாகிவிட்டது. விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு நான் எங்கு சிகிச்சை எடுத்தேன் என்றால் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் எடுத்தேன். விபத்திற்கு பின்னிட்டு தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் எடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்து விட்டது என்றும், நான் சொல்வது போல் எனக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மாதம் ரூ.35 ஆயிரம் சம்பாதித்து வந்ததாக அதிக இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் இல்லை என்பதாலோ, அவர் மது அருந்தி வாகனம் ஓட்டிச் சென்றதாலும், 2ம்எதிர்மனுதார் பாலிசி விதிமீறல் செய்துள்ளதாலும் 1, 2 எதிர்மனுதார்களே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளவர்கள் என்றும், 3ம் எதிர்மனுதார் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மனு 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**MCOP.150/2022 and 152/2022**

**நாள். 15.07.2025**

**ம.சா. 1 – காயத்ரி**

**<u>3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம்எதிர்மனுதார் வாகனத்தை ஓட்ட முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதார் வாகனத்தை ஓட்டிச்சென்ற 1ம் எதிர்மனுதார் மது அருந்தி வாகனத்தை ஓட்டிச்சென்றதாலும் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் 1, 2ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், 3ம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனம் கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் கணவர் தமிழ்புலிகள்கட்சியின் மாவட்டசெயலாளராக இருந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் 12ம் வகுப்பு படித்திருந்தார். தேவிப்பட்டினம் கிராமத்தில் என் கணவர் சொந்தமாக மருந்துக்கடை வைத்திருந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் வருமானவரி செலுத்தி வந்தாரா என்றால் செலுத்தி வந்தார். என் கணவர் விபத்து நடப்பதற்கு முன் 3 வருடங்களுக்குரிய வருமானவரி கணக்கு தாக்கல்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என் கணவர் மருந்துக்கடை நடத்தி மாதம் ரூ.50 ஆயிரம் சம்பாதித்து வந்தார் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற நபருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்திற்கு என் கணவர்பயணம் செய்த இருசக்கர வாகன ஓட்டுநர் காரணம் என்பதால் 3ம் எதிர்மனுதார் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதார் முறையான சாலைவிதிகளை கடைபிடித்துத்தான் வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.